# செய்திமடல்

NEWSLETTER

## பதிப்பு 1

**பங்குனி 2020**

### சத்தியவான் அறக்கட்டளை நிகழ்வுகள்

- கோடைகால திறந்தவெளி விளையாட்டுகளுடனான ஒன்றுகூடல் - **18/07/2020**

- **இயக்குநர் கூட்டத் திகதிகள் 2020**

  26/04/2020
  28/06/2020
  23/08/2020
  18/10/2020
  13/12/2020

சத்தியவான் அறக்கட்டளை தனது மூன்றாவது வருடத்தில் கால் பதித்துள்ளது. இவ் மூன்று ஆண்டுகளில் பல வேலைத்திட்டங்களைச் செய்துள்ளது. இதன் ஒரு அங்கமாக இம் மாதத்திலிருந்து (March 2020) இரண்டு மாதங்களுக்கொருமுறை தனது செய்திமடலை (Newsletter) வெளியிடத் தீர்மானித்துள்ளது.

செய்திமடல் என்பது ஒரு நிறுவனம் தனது அங்கத்தவர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் பிரதானமாக தனது நிறுவனம் சார்ந்த செய்திகளையும் வாசகர்களுக்கு பயன் தரும் விடயங்களயும் கூறும் ஒரு அச்சிடப்பட்ட அல்லது மின்னணு அறிக்கையாகும்.

எமது செய்திமடலானது எமது அறக்கட்டளையால் மேற்கொள்ளப்படவிருக்கும் வேலைத்திட்டங்கள் பற்றிய விபரங்கள், செய்துமுடிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் பற்றிய விபரங்கள், வேலைத்திட்டங்களினால் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், எம் நிகழ்வுகள், அறிவிப்புகள், நாட்டு நடப்புகள்/செய்திகள், பயனுள்ள தகவல்கள் போன்றவற்றைத் தாங்கி வெளிவரவுள்ளது. எமது இந்த முயற்சியானது எமக்கும் உங்களுக்குமிடையிலான தொடர்பாடலை மேம்படுத்தும் என நாம் நம்புகிறோம்.


சத்தியவான் அறக்கட்டளைச் செய்திகள் பக்கம் 1

அறக்கட்டளையின் செயற்பாடுகள் பக்கம் 2

நாட்டு நடப்புகள் பக்கம் 3

# தனிநபர் வேலைத்திட்டம்

**க.திருநாவுக்கரசு**

**குமாரபுரம், திருகோணமலை**



திருநாவுக்கரசு என்பவர் திருகோணமலை மாவட்டம் குமாரபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர். ஒன்றரை வயது தொடக்கம் பதினாறு வயது வரையான ஏழு பிள்ளைகளின் தந்தையான இவர் தனது குடும்பத்தை நடத்துவதற்குப் போதிய வருமானமின்றி மிகவும் வறுமையில் பிள்ளைகளின் உணவு,கல்வித் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் சத்தியவான் அறக்கட்டளையின் தனிநபர் வேலைத்திட்டம் பற்றி அறிந்து எம்மைத் தொடர்பு கொண்டு தனது நாட்கூலி வேலையுடன் தனது மனைவியும் தானும் சேர்ந்து ஒரு தொழிலினைச் செய்தால் தம்மால் தமது குடும்பத்தை வறுமையின்றி வாழவைக்க முடியும் என உறுதிப்படுத்தியதால் நாம் அவருக்கான உதவிகளை வழங்கியிருந்தோம்.

இவரது மனைவி வீட்டிலிருந்து கொண்டே இத்தொழிலினை கணவனின் உதவியுடன் செய்வதால் தமக்குத் தற்போது இரண்டு வருமானங்கள் வருவதால் தாம் இனிமேல் மூன்று வேளயும் சாப்பிடுவது மட்டுமல்லாமல் தமது குழைந்தைகளின் கல்வியையும் சிறப்புறக் கவனிக்கலாம் என மகிழ்வு கொண்டுள்ளார்கள்.

“நாம் இனி யாரிடமும் கையேந்தத் தேவையில்லை எமது உழைப்பில் எமது வாழ்க்கையை நடத்தலாம்” எனக் கூறியுள்ளார்கள்.

ஒரு குடும்பம் உழைத்து வாழ்வதற்கான வழியினை நாம் வகுத்துக் கொடுத்துள்ளதையிட்டு மகிழ்ச்சி கொண்டுள்ளோம்.



# நாட்டு நடப்புகள்




உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஒரு மிகப்பெரும் தொற்றுநோயான கோவிட் 19 (COVID 19) எனப்படும் குறோனா வைரஸ் (Coronavirus) தொற்றுநோய் பிரித்தானியாவையும் உலுக்கிக் கொண்டிருக்கிறது. பிரித்தானிய அரசினால் மக்களை அவர்களின் நடமாட்டத்தைக் குறைத்து தொற்றுநோய் பரவுவதைத் தடுக்க உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் காலவரையின்றி மூடப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரத்திற்குத் தேவைப்படும் தொழிலாளர்கள் (Key workers) தவிர்ந்த ஏனையோர் முடிந்தளவு வீட்டிலிருந்து வேலை செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். இந் நிலையில் நாம் ஒவ்வொருவரும் எமது சமுதாயக் கடமைதனை உணர்ந்து அரசும் சுகாதாரத் திணைக்களமும் அறிவுறுத்தும் படி நடந்து கொள்ளவேண்டியது கடமையாகும்.

நாம் எமது குடும்பத்திற்கு உணவுப் பொருட்களை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும் என நினைத்து அத்தியாவசியமான பொருட்களையும் உணவுப்பொருட்களையும் தேவைக்கு அதிகமாக வாங்கி வைக்காது, எம்மைப் பாதுகாக்க உழைக்கும் ஏனையோரும் பசிப்பிணியற்று இவ் இக்கட்டான சூழலில் வாழ வழிவகை செய்ய வேண்டும்.

அனேகருக்கு மனவுளைச்சலைத் தரக்கூடியது தமது வருமானம் பற்றிய சிந்தனையும் வங்கிக் கடன்களும். பிரித்தானிய அரசு ஒருவருக்கு அவரின் ஊதியம் குறையும் பட்சத்தில் அவர் பெற்ற ஊதியத்தில் 80% இனை அல்லது ஆகக்கூடியது £2500 களையும் மாதத்திற்கு வழங்கப்போவதாக அறிவித்துள்ளது. உங்களினது வருமானம் வீட்டுவாடகை மற்ற அத்தியாவசியச் செலவுகள் போக வங்கிக்கடன், கடன் அட்டைகளுக்கான (bank loan/Credit card) மாதக் கட்டணத்தைச் செலுத்தப்போதாமல் இருப்பின் நீங்கள் அந்நிதி நிறுவனத்துடன் தொடர்புகொண்டு வருமானம் குறைந்ததற்கான ஆதாரத்தைச் சமர்பித்து மூன்று மாதங்களுக்கான கடன் கட்டண ஏற்பாடுகளை (Repayment arrangement) ஏற்படுத்தி உங்களது கடன் கோப்பு மதிப்பு (Credit file/ credit score) பாதிப்படையாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

அரச ஆணைகளுக்கு மதிப்புக் கொடுத்து எம்மையும் எம்மைச் சுற்றியுள்ளவர்களையும் இத் தொற்றிலிருந்து பாதுகாப்போம்.



## சத்தியவான் அறக்கட்டளையிடமிருந்து ஒருவர் உதவிபெறச் செய்யவேண்டியது என்ன?

ஒருவர் இலங்கையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவராக இருந்தால் அவரிற்கு சுயதொழில் செய்யும் விருப்பம், திறமை என்பன இருக்கும் பட்சத்தில், அவர் தான் செய்யவிரும்பும் தொழில் பற்றிய விபரத்தையும் அவரிடம் உள்ள அத்தொழில் பற்றிய அனுபவம் அல்லது தொழில்ஞானம் பற்றிய விபரத்தையும் விண்ணப்பக் கடிதமாக எழுதி தமது முகவரி, கிராமசேவர் பிரிவு, தமது தொலைபேசி இலக்கம் என்பவற்றையும் இணைத்து கீழேயுள்ள மின்னஞ்சலிற்கு அனுப்பவேண்டும்.

www.saththiyavantrust.com +44 7858 080770 saththiyavantrust@gmail.com